# 7

# இயேசுவை நாம் எவ்விதம் கண்ணோக்குகின்றோம்

பல்கலைக் கழக மாணவர்களுக்கு அடிக்கடி ஆராய்ச்சிப் பாடத்திட்டங்கள் மேற்கொள்ளும்படியாக அறிவுறுத்தப்படுகின்றது. இந்த ஆராய்ச்சியை எப்பொழுதும் அவர்கள் மகிழ்ச்சியுடன் செய்வதில்லை. ஒரு வேளை இந்த ஆராய்ச்சிப் படிப்பைக் குறித்த தான, அவர்களுடைய இந்த நடக்கைக்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். முதலாவது, இந்த ஆராய்ச்சி வேலை பெரும்பாலும் கடினமானதாக இருக்கின்றது. யாரோ ஒருவர், “படிப்பதை நான் மகிழ்வுடன் அனுபவிப்பதில்லை, ஆனால் படித்திருப்பதை நான் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கின்றேன்” என்று சொல்லியிருக்கின்றார். அநேக மாணவர்கள் ஆராய்ச்சியைச் செய்வதில் சந்தோஷம் அடைவதில்லை, ஆனால் ஆராய்ச்சியை செய்து முடித்திருப்பதில் அவர்கள் சந்தோஷம் அடைகின்றனர். இரண்டாவதாக, பெரும்பான்மையான ஆராய்ச்சிகள் திறந்த முடிவுள்ளவையாக இருக்கின்றன. ஆராய்ச்சிகள் யாவும், நாம் அறிந்துள்ளவற்றையும், நாம் அறியாதவற்றையும் வகைப்படுத்துகின்றன - சில சமயங்களில் நாம் அறியாதவைகள், நாம் அறிந்துள்ளவற்றை விட அதிகம் தெளிவாக உள்ளன. சில ஆராய்ச்சித் திட்டங்களை முடிக்கும்போது, ஒரு மாணவர், “இந்த ஆராய்ச்சித் திட்டத்தை தொடங்கு முன் இந்தப் பாடத்தைப் பற்றி நான் எதுவும் அறியாதிருந்தேன். இப்பொழுதோ இந்த ஆராய்ச்சித் திட்டத்தை முடித்திருக்கையில் இந்தப் பாடத்தைப் பற்றி ஒருவருமே ஒன்றும் அறியாதிருக்கிறார்கள் என்று அறிந்திருக்கின்றேன்” என்று கூற

*முடிகின்றது. இப்படிப்பட்ட ஒரு முடிவானது மிகவும் நம்பிக்கை யிழக்க வைக்கக் கூடியதாக இருக்கக் கூடும்.*

*சில திறவுகோல் பாடங்களைப் பற்றிய உண்மையை அறியவே நாம் எல்லாரும் விரும்புகின்றோம். அவைகளைப் பற்றிய திறந்த முடிவுகளையும், முடிவற்ற விவாதங்களையும் வைத்து அவைகளின் மூலம் நாம் திருப்தியடைவதில்லை. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பாடத்தில், இது விசேஷித்த வகையில் உண்மையாய் இருக்கின்றது, அவரைப் பற்றிய யாரோ ஒருவரது கருத்தையோ, அல்லது அவரைப் பற்றிய தெளிவற்ற பாடங்களின் விவாதத்தையோ நாம் கேட்க விரும்புவதில்லை; அவரைப் பற்றிய சத்தியத்தை அறிந்து கொள்ளவே நாம் விரும்புகின்றோம். அவரைப் பற்றிய நமது ஆழமான கேள்விகள் குறிப்பானவைகளாகவும், கருத்தை நோக்கியவைகளாகவும் இருக் கின்றன: இயேசு யார்? மெய்யாகவே அவர் தேவனுடைய குமாரனாக இருக்கின்றாரா? வாழ்க்கை மற்றும் இரட்சிப்பைக் குறித்து அவர் என்ன கூறுகின்றார்?*

*இந்த உலகத்தில் வேதாகமம் ஒன்று மட்டுமே உண்மையில் மிகச் சரியான புத்தகமாய் இருக்கின்றது. தேவன் தமது உபதேசங்களைப் பற்றி நாம் நிச்சயப் படுத்திக் கொள்வதற்காகவே இந்தப் புத்தகத்தை நமக்குக் கொடுத்திருக்கின்றார் (2 பேது. 1:3). இயேசுவைப் பற்றி முடிவெடுக்காமல் நாம் வாழ்க்கை நடத்துவதை தேவன் விரும்புவ தில்லை. இயேசு யார் என்பதையும், அவர் என்ன செய்ய வந்தார் என்பதையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். அவரைப் பற்றிய முழுமையான உண்மையை நாம் அறிந்து, அதன் மூலம் நம்பிக்கை நிறைந்த வாழ்க்கையைக் கட்டி எழுப்பவும், சத்தியத்தின்மேல் உறுதிப்பாட்டைக் கொள்ளவுமே அவர் விரும்புகின்றார்.*

*இயேசுவைப் பற்றி நாம் பெற வேண்டிய அதிகாரப் பூர்வமான ஒரே சித்தரிப்பை வேதாகமம் நமக்குத் தருகின்றது. அவர் யார் என்பதை அது நமக்கு இரண்டு வழிகளில் கூறுகின்றது: முதலாவதாக, அவர் வேதாகமத்தில் எப்படி அழைக்கப்படுகின்றார் என்பதைக் கவனிக்கையில் அவர் யார் என்று நாம் காணுகின்றோம். இரண்டா வதாக அவருக்கு உரியதான குணாதிசயங்களை நாம் உற்று நோக்கு கையில் அவர் யார் என்று நாம் காணுகின்றோம்.*

*வேதாகமத்தில் அவர் எப்படி அழைக்கப்படுகின்றார் என்பதை ஜாக்கிரதையுடன் கவனிப்போம். நமக்கு மிகவும் நம்பிக்கையுள்ள ஒருவரால், இன்னொரு மனிதர், பிரசங்கியார் என்றும் போதகர்*

*என்றும் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டால், அவர் எப்படிப்பட்டவர் என்றும், அடிப்படையில் அவர் எம்மாதிரியான நபர் என்றும் நாம் அறிவோம். "பிரசங்கியார்" மற்றும் "போதகர்" என்ற சொற்றொடர்கள் அவரைப் பற்றிய ஒரு சிறந்த சித்தரிப்பை நமக்குத் தருகின்றன.*

*இயேசுவை அடையாளப் படுத்துவதில் வேதாகமமானது நமக்கு எவ்வித சந்தேகத்தையும் விட்டு வைப்பதில்லை, தவறாகப் புரிந்து கொள்ளப்படாத சொற்றொடர்களில் அவர் குறிப்பாய்க் குறிப்பிடப் படுகின்றார். இயேசு வேதாகமத்தில் என்னவென்று அழைக்கப் படுகின்றார் என்பதை நாம் கவனமாய்ப் படிக்கையில் அவர் யார் என்பதை நாம் கற்றுக் கொள்கின்றோம்.*

## அவர் நமது இரட்சகர்

*முதலாவதாக, வேத வசனங்களில் இயேசு, "இரட்சகர்" என்று அழைக்கப்படுகின்றார். "இரட்சகர்" என்ற வார்த்தையானது மற்றவர் களை மிகவும் ஆபத்தான சூழ்நிலையிலிருந்து மீட்பவர் ஒருவரைக் குறிப்பிடுகின்றது.*

*இவரது பிறப்பைப் பற்றி மத்தேயு நற்செய்தி நூலில் கூறப்பட்டுள்ள விபரமானது, பூமிக்குரிய வகையில் இயேசுவின் தகப்பன் என்னப்படும் யோசேப்புவிடம் ஒரு தூதன் கனவில் தோன்றியதாகக் குறிப்பிடுகின்றது. அந்தத் தூதன்,*

> *... "தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவி யாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியி னால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" என்றான் (மத். 1:20, 21).*

*நீங்கள் காண முடிகின்றபடி, இயேசு ஏதோ ஒரு வகையான இரட்சகரல்லர்; அவர் ஒரு தனிச் சிறப்புள்ள இரட்சகராக இருக்க வேண்டியதாயிற்று. ஒரு மனிதர், எரியும் கட்டிடத்திலிருந்து ஒரு குழந்தையைக் காப்பாற்றினால் அவரை ஒரு இரட்சகர் என்று நாம்*

அழைக்கின்றோம். பசியாயிருக்கும் மக்களுக்கு ஒரு மனிதர் உணவளித்தால் அவர் அந்த மக்களின் இரட்சகர் என்று அழைக்கப்படுகின்றார். வேதவசனங்களின்படியாக, இயேசுவானவர் நம்மை நமது பாவங்களில் இருந்து இரட்சிக்கின்றார். அவர் நமது ஆவிக்குரிய இரட்சகராய் இருக்கின்றார்.

பாவம் பற்றிய குற்ற உணர்வு என்பது பொறுப்புள்ள ஒவ்வொரு மனிதரும் எதிர்த்து நிற்க வேண்டிய முதல் இடறலாக இருக்கின்றது. நமது கழுத்தைச் சுற்றி ஒரு ஒலிப் பதிவுக் கருவியைக் கட்டிக் கொண்டு நாற்பத்தியெட்டு மணி நேரத்தில் நாம் நமது வாய்களில் இருந்து வெளிவரும் வார்த்தைகளைப் பதிவு செய்தால் நாம் அனைவரும் பாவிகளே என்பதை சுலபமாகக் காண முடியும் என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கின்றார். நாம் உட்கார்ந்து ஒவ்வொரு வார்த்தையையும் கவனித்து, ஒவ்வொரு கூற்றுக்கும் பின்னால் உள்ள உள்நோக்கத்தை நினைத்துப் பார்த்து, நாம் பேசிய தொனியை ஆழ்ந்து சிந்தித்து நோக்கினால், நாம் எப்பொழுதுமே, சொல்ல வேண்டியவைகளை மட்டுமே சொல்லியிருக்கவில்லை என்று நிச்சயமாய் முடிவு செய்யக் கூடும். இதேபோல், ஒரு காட்சிப் படப் பதிவுக் கருவியைக் கூட நமது வாழ்க்கையின் நாற்பத்தெட்டு மணி நேரத்தைப் படம் பிடிக்கப் பயன்படுத்தலாம். நமது ஒவ்வொரு செயலையும் நாம் மறுபடியும் கண்ணோக்கும்போது, நாம் பாவிகள் என்பதை சுலபமாய்க் காண முடியும். நாம் செய்ய வேண்டியதைச் செய்யாமலிருந்தது மற்றும் செய்ய வேண்டாதவற்றை செய்தது என்ற உண்மையினால் தாக்கப்படுவோம். நாம் பாவிகள் என்று சொல்வதற்கு வேதாகமம் கூட தேவையில்லை. நமது வார்த்தைகளையும், செயல்களையும் நாம் நெருக்கமாகப் பார்க்கின்றபோது, நாம் பாவிகளே என்று நாம் அறிந்து கொள்ளுகின்றோம். ஆயினும் நம்மைப் பற்றிய இந்த உண்மையை எளிதில் அறியக் கூடிய மொழிநடையில் வேதாகமம் அறிவிக்கின்றது. பவுல், கிறிஸ்தவர்களுக்கு, "... நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10) என்று நினைப்பூட்டினார்.

பாவத்தைக் குறித்து என்ன செய்யப்பட முடியும்? நம்மை நாமே மன்னித்துக் கொள்ள முடியாது. நமது பாவம் என்பது மற்றவர்களுக் கெதிரானது மட்டுமல்ல, ஆனால் அது தேவனுக்கெதிரானதாகவும் இருக்கின்றது. நமது மிக அவசரமான தேவையில் நமக்கு யார் உதவி செய்ய முடியும்? உளவியல் நம்மை மன்னிக்க முடியாது. நேர் மறையான எண்ணங்களாலும் இது முடியாது. நாம் பாவிகளல்ல என்று பாசாங்கு காட்டிக் கொள்ளுதலும் நம்மை இரட்சிக்காது. என்ன

*செய்யப்பட முடியும்? நமது இந்த மிகவும் மோசமான நிலைக்கு தேவனின் விடையாக இருப்பவர் இயேசுவே. இயேசு பூமியில் நிறைவேற்றும் ஊழியத்தின் பொருட்டு அவருக்கு அப்பெயர் பரலோகத்தில் தீர்மானம் செய்யப்பட்டதாக யோசேப்புக்குக் கூறப்பட்டது. அவரது பிறப்பின்போது பலஸ்தீன மலை ஒன்றின் மேல் மேய்ப்பர்களுக்கு தூதன், "இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக். 2:11) என்று அறிவித்தான். இயேசு இந்த பூமிக்கு வந்ததின் முக்கியமான நோக்கம், நம்மை நமது பாவங்களிலிருந்து மீட்பதே ஆகும் (1 கொரி. 15:3).*

*நெப்போலியனின் படையில் இருந்த ஒரு வீரனைப் பற்றிய, இருதயத்தைத் தொடும் கதை ஒன்று கூறப்பட்டது. அவன் மிகுந்த தைரியமும், உண்மையுமுள்ள ஒரு வீரனாய் இருந்தான். யுத்தங்களின் இடையே, அவன் தனது கூடாரத்தில் இருந்து கொண்டு தனது கடமைகளையும், குடும்பக் கவலைகளையும் மறுகண்ணோட்டமிட்டுக் கொண்டிருந்தான். ஒரு காகிதத் தாளில் அவன் தனது கடன் தொகைகளையும், தனது குடும்பப் பராமரிப்புக்குத் தேவையான பணத்தையும் பட்டியலிட்டுக் கொண்டிருந்தான். தனது கடன்களை அடைக்கவும், குடும்பத்தின் தேவையைப் பூர்த்தி செய்யவும் போதுமான பணம் தன்னிடத்தில் இல்லை என்று உணர்ந்தபோது அதைரியத்தின் அலையில் அவன் அடித்துச் செல்லப் பட்டான். தனது பொருளாதாரக் கடமைகளைப் பட்டியலிட்டிருந்த அந்தத் தாளின் கீழே அவன் மிகவும் ஆழமான வேதனையுடன், "இந்தக் கடன்களை யெல்லாம் அடைக்கக்கூடியவர் யார் இருக்கிறார்?" என்று எழுதினான். தோல்வி உணர்வுடன் அவன் தனது தலையைத் தனது கைகளில் சாய்த்து உறங்கிப் போனான். அந்த வீரன் அறியாதபடி, நெப்போலியன் தனது படை வீரர்களின் நிலைமையைப் பரிசோதிக்கவும், அவர்களின் பலத்தை மதிப்பிடவும் படை வீரர்களின் முகாமிற்குள் அப்பொழுது வந்தார். அந்த இளம் வீரனின் கூடாரத்தைக் கடந்து போனபோது, ஆய்வு செய்யும்படி அழைத்தார், ஆனால் கூடாரத்தின் உள்ளிருந்து பதில் எதுவும் வரவில்லை. அவர் நடந்து சென்று உள்ளே பார்த்தார். அவர் தூங்கிக் கொண்டிருந்த வீரனையும், அடியில் பரிதாபமான கேள்வி எழுதப்பட்டிருந்த தாளையும் பார்த்தார். உடனே நெப்போலியன் தனது பேனாவை எடுத்து அந்தக் கேள்வியின் அடியில், "நான் அடைப்பேன்" என்று எழுதி அதன் கீழே "நெப்போலியன்" என்று கையெழுத்திட்டார்.*

*நமது பாவக் கடனையும், இரட்சிப்பின் இக்கட்டான தேவை*

*யையும் பார்க்கும்போது, நாமும் கூட, "இந்தக் கடன்களையெல்லாம் அடைக்கக் கூடியவர் யார் இருக்கிறார்?" என்று கதறுகின்றோம். நெப்போலியனைக் காட்டிலும் மிகவும் பெரியவர் ஒருவர் "நான் அடைப்பேன்" என்று பதில் அளித்தார். இவ்வுலகத்தின் இரட்சகரான இயேசு என்பவர் தமது சிலுவை மரணத்தினால் நமக்கு முழுமையான இரட்சிப்பை கொண்டு வந்தார்.*

*இயேசு ஒருவரே நமது ஒரே இரட்சகராக இருக்கின்றார் என்பதை வேதாகமம் மிகவும் தெளிவாகக் கூறுகின்றது. பேதுரு, "அவராலே யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப். 4:12) என்று கூறினார். உங்கள் பாவங்களில் இருந்து நீங்கள் இரட்சிக்கப்பட்டு தேவனுக்கு முன்பாக ஏற்கப்படும் நிலையில் நிற்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் வர வேண்டும் (யோவா. 14:6; மாற். 16:16). வேதாகமத்தின்படி அவரே நமது இரட்சகராக இருக்கின்றார்.*

## கிறிஸ்துவாக

*இரண்டாவதாக, இயேசு, "கிறிஸ்து" என்று அழைக்கப்படுகின்றார். இதன் அர்த்தம் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்பதாகும். கிரேக்க மொழியில் "கிறிஸ்து" என்பதும் எபிரெய மொழியில் "மேசியா" என்பதும் ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகள் ஆகும். இயேசு புதிய ஏற்பாட்டில் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவராக, தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்டவராக அடையாளப் படுத்தப் படுகின்றார்.*

*தீர்க்கதரிசிகள், தேவனுடைய விசேஷித்த ஊழியர் வரப் போவதாக முன்னுரைத்திருந்தார்கள்:*

> *நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி,*

அதை இதுமுதற் கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசா. 9:6, 7).

மீகா, "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது'' (மீகா 5:2) என்று தீர்க்கதரிசனம் சொல்லியிருந்தார். தீர்க்கதரிசிகள் இவ்விதமாய் முன்னுரைத்தபடி வந்தவர் இயேசுவே என்று புதிய ஏற்பாடு நிரூபிக்கின்றது.

இயேசு பூமியில் அவரது ஊழியத்தின் முடிவு நெருங்கிய வேளையில் பிலிப்பிச் செசரியாவின் திசைகளில் தமது சீஷர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தார். அவ்வாறு அவர்கள் நடந்து செல்லுகையில், இயேசு தமது சீஷர்களிடம், "மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள்?" என்று கேட்டார். அதற்கு அவரது சீஷர்கள், "சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்'' என்றார்கள் (மத். 16:13, 14). அவர்கள் இவ்வாறு பதில் அளித்த பிறகு இயேசு, "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டார், பேதுரு அவருக்குப் பதில் அளித்தார். அவர், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று சொன்னார் (மத். 16:15, 16). இயேசு பேதுருவின் பதிலுக்காக அவரைப் பாராட்டினார். அவர், ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்'' என்று கூறினார் (மத். 16:17). வேறு வார்த்தைகளில் சொல்லுவதானால், இயேசு, "பேதுருவே, மனிதர்கள் கூறியதின் அடிப்படையில் நீ இந்த முடிவுக்கு வரவில்லை, பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திலிருந்தே நீ இந்த பதிலைப் பெற்றாய்" என்று கூறினார். இது மனிதரின் கண்டுபிடிப்பல்ல, ஆனால் தெய்வீக வெளிப்படுத்துதல் ஆகும்.

புதிய ஏற்பாடானது இயேசுவைப் பற்றி எவ்விதம் குறிப்பிடுகின்றது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அது அவரை "கிறிஸ்து"

*என்று அழைக்கையில், அவர் தேவனால் விசேஷமாய்த் தேர்ந்து கொள்ளப்பட்டவர் என்பதை அடையாளப்படுத்துகின்றது. அவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவருக்கு முன்னோடியாயிராமல், அவரே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவராக இருக்கின்றார்; தேர்ந்து கொள்ளப்பட்டவரைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எல்லாவற்றின் நிறைவாக அவர் இருந்தார். அவர் தேர்ந்து கொள்ளப் பட்டவரோடு இணைந்தவராயிராமல், அவரே தேர்ந்து கொள்ளப் பட்டவராயிருந்தார்.*

## தேவனுடைய குமாரனாக

*மூன்றாவதாக, புதிய ஏற்பாட்டில் இயேசுவானவர், தேவனுடைய குமாரனாக, தேவத்துவத்தின் இரண்டாம் உறுப்பினராக அடையாளப் படுத்தப்படுகின்றார்.*

*இயேசுவின் பூமிக்குரிய வகையிலான ஊழியத்திற்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்காக யோவான்ஸ்நானன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டார். மனந்திரும்புதலைப் பிரசங்கிப்பதினாலும், பாவங்களின் மன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ் நானத்தைக் கொடுப்பதினாலும் அவர் இந்த ஊழியத்தை நிறை வேற்றினார் (மாற். 1:4). யோவான் தமது பிரசங்கத்திற்கு பதில்செயல் செய்த மக்களுக்கு, வரப்போகும் மேசியாவைச் சுட்டிக் காட்டினார். மக்கள் தங்கள் மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானத்தில், மேசியா வரும்போது அவரை ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்தனர் (அப். 19:4).தேவன் கொடுத்திருந்த இந்த ஊழியத்தை யோவான் நிறை வேற்றுகையில், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவரிடத்தில் சென்று, ஞானஸ் நானம் பெற்றுக் கொண்டனர் (மத். 3:5). ஒரு நாள், யோவான் மக்களை ஆற்றில் ஞானஸ்நானப்படுத்திக் கொண்டிருக்கையில், இயேசு யோர்தான் நதிக்கரையில் தோன்றினார். இந்த சமயத்தில் யோவான், இயேசுவே மேசியா என்பதை மிகவும் நிச்சயமாக அறிந் திருக்கவில்லை (யோவா. 1:29-31)-ஆனால் தம்மை (யோவானைக்) காட்டிலும் இயேசு சிறந்தவர் என்பதை அவர் (யோவான்) அறிந் திருந்தார். அதனால்தான் இயேசு அவரிடத்தில் தமக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி வேண்டுகோள் விடுத்தபோது, யோவான், "நான் உம்மாலே ஞானஸ்நானப்படுத்தப்பட வேண்டுமே, ஆனால் நீர் என்னாலே ஞானஸ்நானப்படுத்தப்படும்படி கேட்கின்றீரே?" என்று*

*சொன்னார். அதற்கு இயேசு, "இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது" என்று கூறினார் (மத். 3:15). யோவான், தேவனுடைய ஊழியத்தைச் செய்து கொண்டிருந்தார். அவர் தேவனால் அனுப்பப்பட்ட மனிதராக இருந்தார். இயேசு தாம் இந்த பூமியில் இருக்கையில் தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிபவராயிருக்க வேண்டும் என்றே விரும்பினார். இவ்விதமாய் அவர் கீழ்ப்படிதலுடன் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றார்-அவருக்குள் பாவங்கள் இருந்ததால் பாவமன்னிப்பும், மனந்திரும்புதலும் தேவை என்பதால் அல்ல, அல்லது வரப்போகிற மேசியாவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் அல்ல. அவரே மேசியாவாக இருந்தார், ஆனால் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக, எல்லா நீதியையும் நிறைவேற்றுவதற்காக அவர் யோவானின் ஞானஸ்நானத்திற்கு தம்மை ஒப்புக் கொடுத்தார்.*

*யோவான் இயேசுவை ஞானஸ்நானப்படுத்திய பிறகு, தண்ணீரி லிருந்து அவர்கள் கரையேறுகையில், தேவனுடைய ஆவியானவர் ஒரு புறாவின் வடிவத்தில் இயேசுவின் மேல் இறங்கி வந்தார். இந்த அற்புத நிகழ்ச்சியைப் பார்த்தபோது, யோவான், இயேசுவே மேசியா என்பதை அறிந்தார் (யோவா. 1:32-34). பிறகு வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன்" என்றுரைத்தது. இது தேவனுடைய குரலேயாகும்-(மத். 3:17). இயேசு தேவனுடைய குமாரன் என்பதற்கான தேவனுடைய சாட்சியம் புதிய ஏற்பாட்டின், இந்த வசனங்களில் விளங்குகின்றது.*

*இயேசுவானவர் தேவனுடைய குமாரனாக இருக்கின்றார் என்பதற்கு, நமக்கு மூன்று சாட்சிகள் கொடுக்கப்பட்டுள்ளதாக அப்போஸ்தலனாகிய யோவான் கூறினார். அவர், "... சாட்சியிடுகிற வைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது" (1 யோவா. 5:8) என்று கூறினார். இயேசு ஞானஸ்நானம் பெற்ற பிறகு அவர் மீது ஒரு புறாவடிவில் இறங்கி வந்ததின் மூலம் பரிசுத்த ஆவியானவர், இயேசு தேவனுடைய குமாரன் என்று சாட்சியம் கொடுத்தார். பரிசுத்த ஆவியானவர் இந்த சாட்சியத்தை நற்செய்தி நூல்களின் மற்ற இடங்களிலும் கொடுத் துள்ளார். "ஜலம்" என்பது இயேசுவின் ஞானஸ்நானத்தைக் குறிப் பதாய் இருக்க வேண்டும், அப்போதுதான் பரலோகத்தில் இருக்கிற பிதாவானவர் இயேசுவைத் தமது குமாரன் என்று அறிவித்தார். "இரத்தம்" என்று யோவான் குறிப்பிட்டது இயேசுவின் மரணமாய்*

இருக்க வேண்டும். சிலுவை மரணத்தைச் சுற்றிலும் நடந்த அற்புத நிகழ்ச்சிகள் இயேசுவின் தெய்வீகத்திற்குச் சாட்சி கொடுக்கின்றன. யோவான், "நாம் மனுஷருடைய சாட்சியை ஏற்றுக் கொண்டால், அதைப் பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது; தேவன் தமது குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சி இதுவே" (1 யோவா. 5:9) என்று கூறினார். ஒரு உண்மையைப் பற்றி மூன்று நேர்மையான மனிதர்கள் ஒரே மாதிரியாகச் சாட்சி கொடுப்பார்களே யானால், அவர்களின் சாட்சியத்தை நாம் ஏற்றுக் கொள்ளுவோம்-பூமிக்குரிய சட்டத்துறையின் நீதிமன்றங்கள் எதிலும் இதே போலவே நடக்கின்றது. அப்படியென்றால் நாம் தேவனுடைய சாட்சியத்தை எவ்வளவு அதிகமாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்! அவர் தமது குமாரனைப் பற்றிச் சாட்சியம் கொடுத்திருக்கின்றார்-ஆவியானவரின் சாட்சியம் (அவரது ஞானஸ்நானத்தின்போது புறா வடிவில் வந்திறங்கியது) ஒன்று, தண்ணீரின் சாட்சியம் (அவரது ஞானஸ்நானத்தின்போது பிதாவானவரின் குரல் கேட்கப்பட்டது) ஒன்று, மற்றும் இரத்தத்தின் சாட்சியம் (அவரது மரணத்தின் போது நடைபெற்ற அற்புதங்கள்) ஒன்று.

இயேசு யார்? வேதவசனங்கள் இந்த வினாவிற்கான விடையில் எவ்வித சந்தேகத்திற்கும் இடம் தருவதாக இல்லை, புதிய ஏற்பாடானது, இயேசுவை தேவனுடைய குமாரன் என்று தெளிவாகப் போதிக்கின்றது. இயேசுவைப் புறக்கணிக்க முடியாது, அவரைப் புறக்கணித்தால் அது தேவனையே புறக்கணித்ததாகும்.

## கர்த்தராக

நான்காவதாக, புதிய ஏற்பாட்டில் இயேசுவானவர் "கர்த்தர்" என்று அழைக்கப்படுகின்றார். அவர் தேவனிடமிருந்து சகல அதிகாரங்களையும் பெற்றுள்ள, நமது மேலான ஆட்சியாளராக இருக்கின்றார்.

இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு, தமது சீஷர்களுக்குத் தோன்றி, தாம் உண்மையிலேயே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை விளக்கப்படுத்தினார். அப்போது இயேசு தமது சீஷர்களிடம் பின்வருமாறு கூறினார்:

> வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா

*குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளை யிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களு டனேகூட இருக்கிறேன் என்றார் (மத். 28:18-20).*

*இயேசு, பிதாவினிடத்திற்கு எழுந்து சென்றபின் பத்து நாட்களுக்குப் பிறகு, அப்போஸ்தலர்களின்மேல் பரிசுத்த ஆவியான வர் ஊற்றப்பட்டார். பெந்தெகொஸ்தே என்ற அந்த நாளில் ஒன்று கூடியிருந்த திரளான கூட்டத்தாருக்குப் பேதுரு பிரசங்கித்தார். இயேசுவே கிறிஸ்துவாயிருக்கிறார் என்று நிரூபிக்க ஆதாரத்தை அவர் எடுத்துரைத்தார். அவர் தமது பிரசங்கத்தின் உச்சக் கட்டத்தை அடைந்த போது, தேவன், இயேசுவை "கர்த்தரும் கிறிஸ்துவுமாக் கினார்" (அப். 2:36) என்று தனது உரையைக் கேட்டுக் கொண்டிருந் தவர்கள் முடிவு செய்யும்படி கேட்டார். பின்னாளில் பவுல், இயேசு தாம் ஒரு மனிதனாகும்படி தம்மைத் தாழ்த்தியதையும், மரணமட்டும் கீழ்ப்படிந்திருந்ததையும் விளக்கப்படுத்துகையில்,*

*ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும் படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2:9-11) என்று எழுதினார்.*

*பவுல், இயேசுவைப் பற்றி மேலும், ''எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே. 1:22, 23) என்றும் எழுதினார்.*

*புதிய ஏற்பாட்டின்படி இயேசுவின் கர்த்தத்துவம் நமக்கு எதை அர்த்தப்படுத்துகின்றது? நடைமுறையில் நாம் அவருக்கு நம்மை*

ஒப்படைக்க வேண்டும் என்பதே அர்த்தமாகும். இயேசு, "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன?" (லூக். 6:46) என்றார். மேலும் அவர், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத். 7:21) என்றும் கூறினார். கிறிஸ்துவின் உபதேசத்திற்கு உங்களை ஒப்புக் கொடுக்க நீங்கள் சித்தமாய் இருக்கின்றீர்களா? இரண்டாவதாக, நமது வாழ்வில் நாம் கிறிஸ்துவுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதே அர்த்தமாகும். நமது பற்றுருதியையும் அன்பையும் நாம் அவருக்குத் தர வேண்டும். பரலோகத்தினால் கனப்படுத்தப்பட்ட கர்த்தர் அவர் ஒருவரே, நமது இருதயங்களில் அரியாசனம் அமர்த்தப்பட்ட ஒரே கர்த்தராகவும் அவரே இருக்க வேண்டும்.

"ஒவ்வொரு இருதயத்திலும் ஒரு சிலுவையும் ஒரு சிம்மாசனமும் இருக்கின்றது. என்னை நான் சிம்மாசனத்தில் அமர்த்திக் கொண்டால், இயேசுவை நான் சிலுவையில் வைக்க வேண்டும். கிறிஸ்துவை நான் சிம்மாசனத்தில் அமர்த்தினால் என்னையே நான் சிலுவையில் வைக்க வேண்டும்" என்று யாரோ ஒருவர் சொன்னார். யார் ஒருவரும் இரண்டு கர்த்தர்களை பெற்றிருக்க முடியாது. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்திற்கு நீங்கள் "ஆம்" என்று கூறினால், உங்களை சுயசித்தம் மற்றும் விருப்பங்களுக்கு நீங்கள் "இல்லை" என்றே கூற வேண்டும். யார் ஒருவரும் இரண்டு எஜமானர்களைக் கொண்டிருக்க முடியாது; நீங்கள் ஒருவரை பகைத்து, மற்றவரைச் சிநேகிப்பீர்கள் (மத். 6:24).

இயேசுவே கர்த்தரென்று புதிய ஏற்பாடு கூறுகின்றது. தேவன் எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளார். அவரே இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கின்றார்.

## முடிவுரை

ஆகவே, இயேசு யார்? இந்த உலகத்தில் முற்றிலும் மிகச் சரியாக உள்ள ஒரே புத்தகமானது அவரை நமது இரட்சகரென்றும், கிறிஸ்து என்றும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் என்றும், தேவனுடைய குமாரன் என்றும், நமது கர்த்தர் என்றும் கூறுகின்றது. இதுவே அவரைப் பற்றிய சத்தியம் ஆகும். அவர் யார் என்பதை நிச்சயமாய் அறிந்து கொள்வதற்கு இதைக் காட்டிலும் மற்ற ஆராய்ச்சிகள் எதுவும்

செய்ய வேண்டும் என்று நீங்கள் காத்திருக்கத் தேவையில்லை. வேதாகமமானது அவரைப் பற்றிய முழுமையான சத்தியத்தை நமக்குக் கூறுகின்றது.

இயேசு இவ்வுலகத்திற்கு வருகை தந்த நிகழ்ச்சியானது, நாள்காட்டியை கி.மு. மற்றும் கி.பி. என்று பிரித்தது. மத். 25:31-46 வசனப்பகுதியானது, அவர் மனித குலத்தை, இரட்சிக்கப்பட்டவர்கள் மற்றும் இழந்துபோகப்பட்டவர்கள் என்று இரண்டாகப் பிரிப்பார் என்று கூறுகின்றது. இயேசு நியாயத்தீர்ப்படைவதற்காகத் தனக்கு முன் நின்றதாகப் பிலாத்து எண்ணினான், ஆனால் உண்மையில் பிலாத்துவே இயேசுவின் முன்பாக நின்றிருந்தான். உலகத்தின் கடைசி நாளில், இரட்சிக்கப்பட்டவர்கள், இயேசுவின் சிம்மாசனத்தில் வலது புறமும், இழந்துபோகப்பட்டவர்கள் அவருடைய சிம்மாசனத்தின் இடது புறமும் நிற்பார்கள். இயேசுவுக்கு உங்களின் பதில்செயலே நீங்கள் வலது புறம் அல்லது இடது புறம் இவற்றில் எங்கு நிற்கப் போகிறீர்கள் என்பதை நிர்ணயிக்கும். அவரது இரட்சிப்பின் மூலமாக மட்டுமே நீங்கள் அவருடைய வலது புறத்தில் நிற்க முடியும். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா. 14:6) என்று அவர் கூறினார். நீங்கள் இயேசுவின் மூலமாக தேவனிடத்தில் வந்து சேருவீர்கள், அல்லது நித்திய அழிவை அடைவீர்கள். நாம் ஜீவனைப் பெறும்படியாகவே அவர் வந்தார் (யோவா. 10:10); அவரில்லையேல் நாம் நித்திய மரணத்தில் வாசம் பண்ணுவோம்.

இரட்சிப்புக்காகத் தம்மிடத்தில் வரும்படி இயேசு நம்மை அழைக்கின்றார். மற்ற மார்க்கத்தின் தலைவர்கள் தங்கள் அமைப்புக் கள் அல்லது தங்கள் உபதேசங்களிடத்திற்கு நீங்கள் வரும்படி உங்களை அழைக்கின்றார்கள். தேவனுடைய குமாரனாகிய இயேசு ஒருவர் மட்டுமே உங்களை, தம்மிடம் வரும்படி அழைக்க முடியும். "வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11:28) என்று அவர் கூறினார்.

## பாட வினாக்கள்

*(விடைகள் 309 ம் பக்கங்களில்)*

1. *“இரட்சகர்” என்ற வார்த்தை எதைக் குறிக்கின்றது?*
2. *இயேசு ஒரு தனிச் சிறப்புள்ள இரட்சகராயிருப்பது எவ்விதம்?*
3. *“கிறிஸ்து” என்பது எதை அர்த்தப்படுத்துகின்றது?*
4. *இயேசுவானவர் தேவனுடைய குமாரன் என்று நாம் எவ்விதம் அறிகின்றோம்?*
5. *ஆவி, ஜலம் மற்றும் இரத்தம் என்று 1 யோவா. 5:7, 8ல் குறிப்பிடப்பட்டுள்ளவை யாவை?*
6. *அப். 2ல் பேதுரு தமது உரையைக் கேட்டுக் கொண்டிருந் தவர்கள் இயேசுவைப் பற்றி என்ன முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்?*
7. *நடைமுறையில் இயேசுவின் கர்த்தத்துவம் நமக்கு எதை அர்த்தப்படுத்துகின்றது?*

## வார்த்தை உதவிகள்

***தாவீதின் நகரம்*** - பெத்லகேம்.

***சிலுவையிலறைதல்*** - *சிலுவையில் தொங்கி மரணமடைதல்; மரண தண்டனையளிப்பதில் ரோமானியர் முறைகளில் ஒன்று. இயேசு குற்றமற்றவராயிருந்தாலும், நமது பாவங்களுக்காக அவர் சிலுவையி லறையப்பட்டார்.*

***இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா*** - *இயேசுவையும் அவரது மாபெரும் தன்மையையும் பற்றிய குறிப்புரை. அவர் எல்லாருக்கும் மேலானவர்.*

***பெந்தெகொஸ்தே (பெந்தெகொஸ்தே நாள்)*** - *யூதர்கள் கொண் டாடிய வாரங்களின் பண்டிகை, இது அறுப்பின் பண்டிகை என்றும் அறியப்பட்டது; இந்த நாளில்தான் சபை தொடங்கியது (அப். 2).*

***ஒப்புக் கொடுத்தல்*** - *தேவனுக்கும் அவரது வசனத்திற்கும் கீழ்ப்படிதல்.*